**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.S.பொன் மெலிசா B.A., LL.B.,**

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருநெல்வேலி

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.5/2024 அதன் அ.வ.எண்.545/2022**

G.R.பார்வதி ... மனுதாரர்/ 2ம் பிரதிவாதி

–எதிர்–

1) சண்முக சுந்தரம்
2) S.குருசாமி
3) S. கணபதி சுப்பிரமணியன்
4) S. செந்தில் ஆறுமுகம்
5) மாரியப்பன் ... எதிர்மனுதாரர்கள் /வாதிகள்
6) P. பொன்ரத்தினா ... எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 28.10.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சிதம்பரம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.திலக் அவர்கள் ஆஜராகியும், 6 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.பட்டுராஜ் அவர்கள் ஆஜராகியிருந்த போதிலும் போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் வழக்குரையை கோப்பிற்கு எடுத்து உத்தரவிடக்கோரி, கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 சிபிசி ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில், மனுதாரரின் மூதாதையர்கள் பொன்னம்பலசுவாமியின் தனித்த சொத்துக்களை டிரஸ்டி நிலையில் பராமரித்து

அதன் மூலம் கிடைத்த வருவாயை பெற்று, தபசிலில் உள்ள நித்தியானந்தா சுவாமி கோவிலுக்கு நித்திய பூஜை மற்றும் கைகரியங்களை செய்து வந்ததாகவும், அதன்பின் தற்போது மனுதாரர் மேற்படி பணிகளை செய்து வருவதாகவும், மேற்படி சங்கதிகளை நிரூபிக்க தேவையான ஆவணங்கள் கிடைக்காத காரணத்தினால், மேற்படி சங்கதிகள் சொல்லாமல் விடுபட்டு விட்டதாகவும், தற்போதுதான் மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாகவும், எனவே, அதன்படி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் பிராது தபசில் சொத்தினை பொறுத்து அந்நியர் என்றும், மனுதாரர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில், எதிர்மனுதாரர்கள் பிராது தபசில் சொத்து மற்றும் கோவில் பரம்பரை அக்தாராக செயல்பட்டு கோவிலை நிர்வகிக்கும் பரிகாரம் வழங்க தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துவிட்டு அதற்கு முரணாக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

4) அசல் வழக்கானது, மனுதாரர் மற்றும் 6ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, 1 முதல் 5 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர், மனுதாரரின் மூதாதையர்கள் பொன்னம்பலசுவாமியின் தனித்த சொத்துக்களை டிரஸ்டி நிலையில் பராமரித்து அதன் மூலம் கிடைத்த வருவாயை பெற்று, தபசிலில் உள்ள நித்தியானந்தா சுவாமி கோவிலுக்கு நித்திய பூஜை மற்றும் கைகரியங்களை செய்து வந்ததாகவும், அதன்பின் தற்போது மனுதாரர் மேற்படி பணிகளை செய்து வருவதாகவும் என்பதை பொறுத்து எடுத்துரைக்க கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதியளிக்க வேண்டுமென கோரியுள்ளார். கூடுதல் எதிர்வழக்குரை மூலம் மனுதாரர் தனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள எந்த சங்கதிகளையும் மறுத்து கட்சி செய்யவில்லை. மேலும், மனுதாரர் கூடுதல்

எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை ஆவணங்கள் சகிதம் நிரூபிக்கும் சுமை மனுதாரரையே சாரும். மேலும், அசல் வழக்கில் சாட்சிய விசாரணை இன்னும் தொடங்கப்படாத நிலையில், வாதிகளுக்கு அவரது தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் போதிய வாய்ப்புகள் உள்ளது. எனவே, இந்த மனுவினை அனுமதிப்பதினால், எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்பட போவதில்லை என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் பெருக்கத்ததை தடுக்கவும், நீதியின்பால் நலன் கருதியும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S

Uploaded on 14.11.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.11.14 17:31:57 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PON MELISA S

Uploaded on 14.11.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.11.14 17:32:02 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2024 அதன்</u>**

**<u>அ.வ.எண்.545/2022</u>**

சீரான / வரைவு – உத்தரவு
14.11.2025